விளங்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் தங்களுக்கு கூடிய விரைவில் காவிரி நீர் கிடைக்கும் என்று பெண்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எந்த ஆண்டு செயல்படத் தொடங்கும்? எத்தனை ஆண்டுக்குள் திட்டம் முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு துவக்குவதற்கு எல்லாவிதமான ஏற்பாடு களையும் செய்து வருகிறது. இந்தத் திட்டம் 1995 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இந்த மேட்டூர் தொகுதி மட்டும் அடங்கிய திட்டமா? அல்லது இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு—அங்கே ஓமலூரில் ஏரோட்ராம் கட்டப் பட்டு அனேகமாக இந்த ஆண்டே திறக்கப்பட இருக் கிறது. எனவே, இந்தத் திட்டம் ஓமலூர் தொகுதி, தாரமங்கலம் தொகுதி, மேட்டூர் தொகுதி அடக்கிய திட்டமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல இந்தத் திட்டத்தை ஓமலூர் பகுதிக்கும் விஸ்தரித்து ஆய்வு நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 409, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

409—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*3772—செல்வி எல். சுலோசனா:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மேட்டுப்பாளையம் தொகுதி, சிக்கதாசம்பாளையம் பஞ்சாயத்து கரட்டுமேடு பகுதியை மையப்பகுதியாக

1992 மார்ச் 31]

வைத்து ஆறு கிராமப் பஞ்சாயத்துகளுக்கு பவானி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிக்கதாசம்பாளையம் ஊராட்சி மற்றும் 16 ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்குவதற்குரிய திட்டம் திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. இதற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதலுக்குப் பின்னர் களப் பணிகள் துவக்கப் படும்.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினுடைய பணிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் இல்லாத என்னுடைய தொகுதியிலுள்ள இரும்பறை, மூடுதுறை, இருப்பு நத்தம் ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்க ஜீவநதியான பவானி என் தொகுதியின் வழியாகச் செல்வதால் இந்த வருடம் மேற்கொள்ள இருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா, நீங்கள் கேட்டு இருப்பது சிக்கதாசம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்தான். மற்ற ஊர்கள் அதில் வருகிறதா ? (குறுக்கீடு) உங்கள் தொகுதியில் இருக்கலாம். இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அந்த ஊர்கள் வருகிறதா ? (குறுக்கீடு) அப்படி இல்லை என்றால் அமைச்சரிடம் பதில் இருக்காது. இந்த சிக்கதாசம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இணைந்த ஊர்களாக இருந்தால் அமைச்சரிடம் பதில் இருக்கும்.

செல்வி எல். சுலோசனா : அரசு இந்த வருடம் மேற்கொள்ள இருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணியில் மேற்படி கிராமங்களைச் சேர்த்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமங்களை இந்தத் திட்டத்தில் சேர்ப்பதற்கு இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.